


| 04.12.2025 | 49. தெய்வ அன்பை நிலைநாட்டும் வைராக்கியம் வேண்டும்! |
|---|---|




**எ**வ்வளவுதான் வெளியில் நிகழ்வுகள் ஏற்பட்டாலும், தங்களை சந்தித்த எதிர்ப்புகளிலும் இழிவுப்படுத்தப்பட்டதிலும் 'கர்த்தரால் அருளப்பட்டது' என்றே எண்ணி முன்செல்வார்கள்! தங்கள் சொந்த சுய - விருப்பத்தின் சிங்காசனத்தின் குரலுக்கு தொடர்ச்சியாய் மறுப்பு கூறி விடுவார்கள்.

இந்த ஆசீர்வதிக்கப்பட்ட நிலையிலிருந்துதான் 'தெய்வ அன்பின் வெள்ளம்' ஜீவநதியாய் புறப்பட்டுச் செல்லுகிறது. ஆனால், எத்தனை பேர் இந்த தெய்வீக நிலைக்கு கடந்து வந்திருக்கிறார்கள்? எனக்குத் தெரிந்த வரை "வெகு கொஞ்சம் பேர்களே" என்பதை அறிவேன். நான் கண்டு அனுபவித்த இந்த சம்பூரணத்தை இன்னமும் எவ்வளவு தெளிவாய் கூற முடியும்? என்றே அங்கலாய்கிறேன். ஆகிலும், நான் பெற்ற ஜீவியத்தின் தெய்வீக பெலத்தோடு, என்னால் முடிந்த வார்த்தைகள் மூலமாய், நான் அனுபவித்த பாக்கியத்தை மற்றவர்களுக்கு அறிவிக்கிறேன்!

– ரத்னம்